சார்பு நீதிமன்றம், பல்லடம்.

MCOP.NO 70/2023

மனுதாரர் தரப்பு சாட்சி : PW3

பெயர் மற்றும் வயது : சபாபதி

தந்தை பெயர் : பழனிசாமி

தொழில் :

கிராமம் :

தாலுகா : பல்லடம்

மாவட்டம் : திருப்பூர் மாவட்டம்

2026 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 04 ஆம் நாள் புதன்கிழமை திரு.க.யுவராஜ்,பி.ஏ.,பி.எல்., சார்பு மற்றும் உதவி அமர்வு நீதிபதி, பல்லடம் அவர்களின் முன்னிலையில் சாட்சிக்கு இந்நீதிமன்ற இரண்டாம் நிலை பெஞ்ச் கிளார்க் அவர்களால் சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டது

**மனுதாரர் தரப்பில் சாட்சி வரவழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணத்தின் பேரில் முதல் விசாரணை**

எனது தரப்பு முதல் விசாரணையை எழுத்து மூல நிரூபண பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ளது எனது கையெழுத்து தான். நான் சொன்ன விவரங்களை கணினியில் பதிவு செய்து அதனை நான் சரிபார்த்து கையெழுத்து செய்து தாக்கல் செய்துள்ளேன். எனது தரப்பு ஆவணங்களாக

1. சாட்சியின் ஆதார் அடையாள அட்டை ம.சா.ஆ. 18 ஆக குறியீடு செய்யப்படுகிறது

**2 வது எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் யார் சொல்லி சாட்சியம் அளிக்க வந்தேன் என்றால் மனுதாரர் அழைத்தன் பேரில் வந்தேன். என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ. 11 என்னால் வழங்கப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். அந்த கையொப்பம் என்னுடையது தான் என்றால் சரிதான். அந்த கடிதம் யாரிடம் கொடுக்கப்பட்டது என்றால் மனுதாரரிடம் கொடுக்கப்பட்டது. அந்த கடிதம் எப்போது கொடுக்கப்பட்டது என்றால் 2022 ல் கொடுத்தேன். மேற்படி கடிதத்தில் சொல்லப்பட்டுள்ள நிறுவனத்தை நான் தான் நடத்தி வருகிறேன் என்றால் சரிதான் எனது நிறுவனம் பங்குதாரர் நிறுவனம் என்றால் சரிதான். மேற்படி கடிதத்தில் எனது பங்குதாரரின் கையொப்பம் இல்லை என்றால் சரிதான். எங்களது நிறுவனம் பதிவு செய்யப்பட்ட நிறுவனமா என்றால் இல்லை. மேற்படி மனுதாரர் எனது நிறுவனத்தில் பணியாற்றியதாக காட்ட எந்த ஆவணமும் தாக்கல் செய்யப்படவில்லை எனவே எனது சாட்சியம்

ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்றால் சரியல்ல. மேலும் நான் மாதம் ரூ.24,375/- மனுதாரருக்கு சம்பளம் கொடுத்தாக எந்த ஆவணமும் தாக்கல் செய்யப்படவில்லை எனவே எனது சாட்சியம் ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்றால் சரியல்ல. ம.சா.ஆ 11 அதிக இழப்பீடு பெறவேண்டி தயாரித்து தாக்கல் செய்யப்பட்டள்ளது, எனவே எனது சாட்சியம் ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்றால் சரியல்ல.

சாட்சி கூறிய படி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சிடப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது

(Sd/-)K.Yuvaraj,B.A.,B.L.,
சார்பு நீதிபதி, பல்லடம்.